# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in


**முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப., (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
******

**ஆணை எண்: 63 /பேரூ/2025**
**நாள் : 12.05.2025**

| | | |
|---|---|---|
| திரு. A.S. ஏழுமலை,<br>பொன்னேரி,<br>திருவள்ளூர் மாவட்டம். | – | முறையீட்டு மனுதாரர் |
| செயல் அலுவலர்,<br>ஆரணி பேரூராட்சி,<br>திருவள்ளூர் மாவட்டம். | – | எதிர் மனுதாரர் |

திருவள்ளூர் மாவட்டம், ஆரணி, பொன்னேரி தாலுக்கா, கதவு எண்.109, பஜார் தெரு, ஏழுமலை ஹார்டுவேர்ஸ் என்ற முகவரியை சேர்ந்த திரு. A.S. ஏழுமலை என்பவரது 03.12.2024 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 04.12.2024 அன்று பெறப்பட்டு, 63/பேரூ/2025 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

**<u>ஆணை</u>**

திருவள்ளூர் மாவட்டம், ஆரணி, பொன்னேரி தாலுக்கா, கதவு எண்.109, பஜார் தெரு, ஏழுமலை ஹார்டுவேர்ஸ் என்ற முகவரியை சேர்ந்த மனுதாரர் திரு. A.S. ஏழுமலை என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு தனது 03.12.2024 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்:

"ஐயா, நான் மேற்கண்ட விலாசத்தில் வசிக்கிறேன். ஆரணி பேரூராட்சியில் பொது மக்களின் தேவைக்காக தெரு மின்விளக்கு விநியோகம் செய்ய வேண்டி திருவள்ளூர் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அவர்களது செயல்முறை ஆணையின்படி நாள் 04.12.2023 அன்று வழங்கப்பட்ட கடிதத்தின் அடிப்படையில் தொகை 1. ரூ.1,30,951/-, 2. தொகை ரூ.95,525/-, 3. தொகை ரூ.1,98,180/-, 4. தொகை ரூ.1,90,700/-, 5. தொகை ரூ.2,55,748/- என மொத்தம் ரூ.8,71,104/- குறிப்பிட்டுள்ள தொகைக்கான மின்விளக்குகளை விநியோகம் செய்து சுமார் 18 மாதங்கள் கடந்தும் எனக்கு வழங்க வேண்டிய தொகையினை செயல் அலுவலர் அவர்கள் வழங்க மறுக்கிறார். மறுப்பதற்கான காரணத்தை கேட்கும்போது, முன்பு இருந்த செயல் அலுவலர்

ஆணையின்படி தெரு மின்விளக்குகள் வழங்கப்பட்டுள்ளது. எனவே என்னால் இந்த தொகையினை வழங்க இயலாது என்று திட்டவட்டமாக கூறுகிறார். எனவே எனது பணிவான முறையீட்டை ஏற்றுக்கொண்டு எனக்கு வழங்க வேண்டிய தொகையினை இனியும் காலதாமதம் ஏற்படுத்தாமல் பெற்றுத் தருமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 05.03.2025 நாளிட்ட அறிவிப்பின் மூலம் ஆரணி பேரூராட்சி செயல் அலுவலரிடம் கோரப்பட்டது.

3. ஆரணி பேரூராட்சி செயல் அலுவலர் தனது 21.03.2025 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்.

மனுதாரரின் மனுவில் கோரியுள்ள பட்டியல்கள் கடந்த 2022 ஜூலை மாதம் முதல் 2023 பிப்ரவரி மாதம் வரை மேற்கொள்ளப்பட்டவையாகும். அப்போதைய செயல் அலுவலர் மேற்கொண்ட செலவினங்கள் குறித்து தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் இப்பேரூராட்சியின் துணைத் தலைவர் திரு. க. சுகுமார் என்பவரால் தொடரப்பட்ட வழக்கு எண்.359/பேரூ./2023 என எண்ணிடப்பட்டு வழக்கு நடைபெற்று இறுதியாக 23.12.2023 நாளிட்ட தீர்ப்புரை அளிக்கப்பட்டுள்ளது. இத்தீர்ப்புரையில் ஆரணி பேரூராட்சியின் பொது நிதியில் நடந்த முறைகேடுகள் தொடர்பாக மட்டுமல்லாமல், பேரூராட்சியில் நடைபெற்ற அனைத்து பணிகள் தொடர்பான கோப்புகளை முழுமையாக ஆய்வு செய்து அந்த அறிக்கை பேரூராட்சிகள் இயக்குநருக்கு அனுப்பி வைக்க உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறை இயக்குநர் அறிவுறுத்தப்பட்டார். அந்த அறிக்கையில் முறைகேடுகள் நடந்திருக்கும் என தெரிய வருமேயானால் சம்பந்தப்பட்ட அனைத்து அலுவலர்கள் மீதும் பேரூராட்சிகளின் இயக்குநர் உரிய ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ள பரிந்துரை செய்து, முறைமன்றம் ஆணையிட்டுள்ளது. மேற்படி முறைமன்றம் உத்தரவிட்டு, உள்ளாட்சி நிதி தணிக்கை துறையால் தணிக்கை மேற்கொள்ளப்பட்டு தொடர் நடவடிக்கையில் இருந்து வருவதால், 08/2024 வரை பணியில் இருந்த செயல் அலுவலர்கள் அப்பட்டியல் தொகையை உரியவருக்கு வழங்க நடவடிக்கை எடுக்காமல் இருந்துள்ளனர். எனவே மேற்கண்டுள்ள முறைமன்ற வழக்கின் தீர்ப்பினை கருத்தில் கொண்டு துறை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதால், திருவாளர் ஏழுமலை ஹார்டுவேர்ஸ் அவர்களால் அளிக்கப்பட்டுள்ள புகார் மனுவில் தெரிவித்துள்ள பட்டியல் தொகை வழங்க இயலவில்லை என்ற அறிக்கையை உள்ளாட்சிகள் முறைமன்ற நடுவத்திற்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது" என தெரிவித்துள்ளார்.

4. மனுதாரரும் மற்றும் எதிர்மனுதாரரான ஆரணி பேரூராட்சி செயல் அலுவலரும் 15.04.2025 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 07.04.2025 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் திரு. A.S. ஏழுமலை என்பவருக்கு உடல்நலயின்மை காரணமாக அவர் சார்பாக மனுதாரரது மகன் திரு. E. வெங்கடேஷ் என்பவர் 15.04.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை அளித்துள்ளார்:

- திருவள்ளூர் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் 04.12.2023 நாளிட்ட 5 செயல்முறைகளின் ஆணைகளின்படி, முறையே ரூ.95.525, ரூ.1,30,951, ரூ.1,90,700, ரூ.1,98,180 மற்றும் ரூ.2,55,748 என ஆக மொத்தம் ரூ.8,71,104 மதிப்பீட்டில் ஆரணி பேரூராட்சி பொதுமக்களின் பயன்பாட்டிற்காக தெரு மின்விளக்கு உபகரணங்கள் எனது தந்தை திரு. A.S. ஏழுமலை என்பவரால் விநியோகம் செய்த வகையில் மேற்படி மொத்த பட்டியல் தொகையான ரூ.8,71,104ஐ சுமார் 18 மாதங்கள் கடந்தும் ஒப்பளிப்பு செய்யப்படவில்லை.

- இது குறித்து தற்போதைய பேரூராட்சி செயல் அலுவலரிடம் அணுகிய போது, ஆரணி பேரூராட்சி பொதுமக்களின் பயன்பாட்டிற்காக தெரு மின்விளக்கு உபகரணங்கள் முன்னாள் செயல் அலுவலர் ஆணையின்படி விநியோகம் செய்யப்பட்டதால் தற்போது உள்ள செயல் அலுவலர் அவரால் ஒப்பளிப்பு வழங்க இயலாது என தெரிவித்து வருகிறார்.

- எனவே, தெருமின்விளக்குகள் விநியோகம் செய்த வகையில் எனது தந்தைக்கு சேர வேண்டிய மொத்த பட்டியல் தொகை ரூ.8,71,104-ஐ உடனடியாக ஒப்பளிப்பு செய்வதற்கு ஆவன செய்யுமாறு இம்முறைமன்ற நடுவத்தை பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

6. எதிர்மனுதாரரான ஆரணி பேரூராட்சி செயல் அலுவலர் திரு. அ. அபுபக்கர் என்பவர் 15.04.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை அளித்துள்ளார்:

- மனுதாரர் திரு A.S. ஏழுமலை என்பவர் ஆரணி பேரூராட்சிக்குட்பட்ட தெரு மின்விளக்கு உபகரணங்கள் விநியோகம் செய்த வகையில் கோரும் மொத்தப் பட்டியல் தொகை ரூ.8,71,104 ஆனது 2022 ஆம் ஆண்டு ஜுலை முதல் 2023 ஆம் ஆண்டு பிப்ரவரி வரை உள்ள காலத்திற்குரியதாகும்.

- இதற்கிடையில், ஆரணியை சார்ந்த திரு. க. சுகுமார் என்பவர் 14.11.2023 நாளிட்ட முறையீட்டு மனு மூலம் இம்முறைமன்ற நடுவத்தில் அளிக்கப்பட்ட புகாரில் ஆரணி பேரூராட்சியில் பல்வேறு பணிகள் மேற்கொண்டதில் முறைகேடுகள் நடந்துள்ளன எனவும், இவற்றில் ஒன்றான மின் விளக்குகள் வாங்குவதில் 60 வாட்ஸ் பல்புகள் வாங்குவதாக கணக்கு காட்டி பணத்தை கையாடல் செய்து அதற்கு பதில் 40 வாட்ஸ் பல்புகள் மட்டும் வாங்கியுள்ளனர் என சமர்ப்பிக்கப்பட்ட மனுவினை இம்முறைமன்ற நடுவம் விசாரணை செய்து, ஆணை எண்.359/பேரூ./2023 நாள் 23.12.2023ல் ஆரணி பேரூராட்சியில் நடைபெற்ற அனைத்துப் பணிகள் தொடர்பான கோப்புகளை உள்ளாட்சி நிதித் தணிக்கை துறை மூலம் ஆய்வு செய்து, அதன் அறிக்கையின் அடிப்படையில் முறைகேடுகள் நடந்திருப்பின் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மீது துறை ரீதியான நடவடிக்கை மேற்கொள்ள பரிந்துரை செய்யப்பட்டு ஆணை வெளியிடப்பட்டது.

மேற்கண்ட இம்முறைமன்ற நடுவர் ஆணையின்படி, உள்ளாட்சி நிதித் தணிக்கை துறையால் தணிக்கை மேற்கொள்ளப்பட்டு தொடர் நடவடிக்கையில் உள்ளது. உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையின் அறிக்கை இந்நாள்வரை பேரூராட்சியில் பெறப்படவில்லை. எனவே,

மனுதாரருக்கு ரூ.8,71,104/- தொகையினை வழங்க இயலவில்லை. இந்நிலையில், அதனடிப்படையில் மனுதாரருக்கு வழங்கப்பட வேண்டிய தொகையினை குறித்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை இம்முறைமன்ற நடுவத்தில் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

7. மனுதாரரின் புகார் மனு, அவரது மகன் திரு. E. வெங்கடேஷ் என்பவரின் வாக்குமூலம் மற்றும் எதிர்மனுதாரரான ஆரணி பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை மற்றும் அவரது வாக்குமூலம் ஆகியவை தொடர்புடைய ஆவணங்களுடன் இம்முறை மன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது.

திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி என்ற இடத்தைச் சார்ந்த மனுதாரர் திரு. A.S. ஏழுமலை என்பவர் தனது 03.12.2024 நாளிட்ட முறையீட்டு மனுவில், திருவள்ளூர் மாவட்டம், ஆரணி பேரூராட்சியில் பொது மக்களின் பயன்பாட்டிற்காக தெரு மின்விளக்கு உபகரணங்கள் மனுதாரரிடம் கொள்முதல் செய்த வகையில், மொத்த பட்டியல் தொகையான ரூ.8,71,104-ஐ ஆரணி பேரூராட்சியால் கடந்த 2 வருடங்களாக ஒப்பளிப்பு செய்யாமல் காலதாமதம் செய்வதாக புகாராக தெரிவித்து, ஒப்பளிப்பு செய்வதற்கு ஆவன செய்யுமாறு இம்முறைமன்ற நடுவத்தை கோரியுள்ளார்.

திருவள்ளூர் மாவட்டம், ஆரணி பேரூராட்சியில் 2022-23 ஆம் ஆண்டில் பேரூராட்சிக்குட்பட்ட தெரு மின்விளக்குகள் பராமரிப்பிற்கு தேவையான உதிரிபாகங்கள் ஒப்பந்தப்புள்ளி மூலம் ஏழுமலை ஹார்டுவேர்ஸ் என்ற நிறுவனத்தின் மூலம் கொள்முதல் செய்து விநியோகம் செய்த வகையில், இந்நிறுவன உரிமையாளர் மற்றும் மனுதாரருமான திரு. ஏழுமலை என்பவர் 13.07.2022 நாளிட்ட பட்டியல் தொகை ரூ.1,98,180, 19.10.2022 நாளிட்ட பட்டியல் தொகை ரூ.95,525, 24.11.2022 நாளிட்ட பட்டியல் தொகை ரூ.1,30,951, 23.12.2022 நாளிட்ட பட்டியல் தொகை ரூ.1,90,700 மற்றும் 06.02.2023 நாளிட்ட பட்டியல் தொகை ரூ.2,55,748 என ஆகமொத்தம் ரூ,8,71,104 தொகைக்கான பட்டியல்களை பேரூராட்சியில் சமர்ப்பிக்கப்பட்டதினை தொடர்ந்து, மேற்காணும் 5 பட்டியல் தொகைகளை ஆரணி பேரூராட்சி பொது நிதியிலிருந்து வழங்கிட 04.12.2023 நாளிட்ட திருவள்ளூர் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் ஆணைகள் மூலம் ஆரணி பேரூராட்சி செயல் அலுவலருக்கு அனுமதியளித்து ஆணை வெளியிடப்பட்டது.

இதற்கிடையில், திருவள்ளூர் மாவட்டம் ஆரணியைச் சார்ந்த திரு. க. சுகுமார் என்பவர் தனது 14.11.2023 நாளிட்ட முறையீட்டு மனுவில் ஆரணி பேரூராட்சி மன்ற தலைவரும் மற்றும் பேரூராட்சி செயல் அலுவலரும் சேர்ந்து, 2022-23 ஆம் ஆண்டில் பொது நிதியில் மேற்கொள்ளப்பட்ட செலவினங்களில் கையாடல் செய்து முறைகேடு செய்துள்ளதாகவும் மற்றும் பல்வேறு புகார்கள் தெரிவித்து இருந்தார். இப்புகாரில் பேரூராட்சியில் தெரு மின்விளக்குகள் கொள்முதல் செய்த செலவினத்திலும் கையாடல் செய்துள்ளதாக தெரிவித்திருந்தது ஒன்றாகும். திரு. க. சுகுமார் சமர்ப்பித்த புகார் மனுவினை இம்முறைமன்ற நடுவம் விசாரணை மேற்கொண்டு, 23.12.2023 நாளிட்ட ஆணை எண்.359/பேரூ./2023ல் ஆரணி பேரூராட்சியில் பொதுநிதி முறைகேடுகள் தொடர்பாக மட்டும் அல்லாமல் அந்த பேரூராட்சியில் நடைபெற்ற அனைத்துப் பணிகள் தொடர்பான கோப்புகளை முழுமையாக ஆய்வு செய்து அதன் அறிக்கையை 3 மாதத்திற்குள் பேரூராட்சிகளின் இயக்குநருக்கு அனுப்பி வைக்குமாறு உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை இயக்குநருக்கு அறிவுறுத்தி ஆணை வெளியிடப்பட்டது.

மேற்காணும் இம்முறைமன்ற நடுவ ஆணைப்படி ஆரணி பேரூராட்சியில் மனுதாரர் ஒப்பளிப்பு கோரும் தொகை உள்ளடக்கிய 2022-23 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட செலவினங்கள் தொடர்பாக உள்ளாட்சி நிதித் தணிக்கை துறையால் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, தொடர் நடவடிக்கையில் உள்ள நிலையில் தணிக்கைத் துறையின் அறிக்கை இந்நாள்வரை பெறப்படவில்லை என்பதால் மனுதாரர் ஒப்பளிப்பு கோரும் மொத்த பட்டியல் தொகையான ரூ.8,71,104-ஐ வழங்க இயலவில்லை என்பதை பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கை மற்றும் அவரது வாக்குமூலம் வாயிலாக தெரிய வருகிறது.

இந்நிலையில், 2022-23 ஆம் ஆண்டில் ஆரணி பேரூராட்சியில் மேற்கொள்ளப்பட்ட செலவினங்கள் குறித்து, உள்ளாட்சி நிதித் தணிக்கை துறையால் மேற்கொள்ளப்பட்டுள்ள தணிக்கையை துரிதமாக நிறைவு செய்து அதன் அறிக்கையை சமர்ப்பிக்க உரிய அறிவுரைகள் வழங்குமாறு உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை இயக்குநரை அறிவுறுத்தலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

மேலும், தணிக்கைத் துறையின் அறிக்கையினை பெற்று அதன் அடிப்படையில் மனுதாரர் ஒப்பளிப்பு கோரும் தொகையான ரூ.8,71,104-ஐ வழங்குவது குறித்து விதிமுறைகளுக்கு உட்பட்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு ஆரணி பேரூராட்சி செயல் அலுவலரை அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

. 2025-ஆம் ஆண்டு மே திங்கள் 12-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சிஅமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1. திரு. A.S. ஏழுமலை,
ஏழுமலை ஹார்டுவேர்ஸ்,
109, பஜார் தெரு,
பொன்னேரி தாலுக்கா,
திருவள்ளூர் மாவட்டம்.

2. செயல் அலுவலர்,
ஆரணி பேரூராட்சி,
திருவள்ளூர் மாவட்டம்.

3. இயக்குநர்,
உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை,
571, அண்ணா சாலை, நந்தனம், சென்னை–600 035.

4. பேரூராட்சிகளின் ஆணையர்,
பேரூராட்சிகளின் ஆணையரகம்,
இராஜா அண்ணாமலைபுரம்,
எம். ஆர்.சி நகர், சென்னை–600 028.

5. இணை இயக்குநர் / ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer).
(பெயரிட்ட உறையில்)
பேரூராட்சிகளின் ஆணையரகம்,
இராஜா அண்ணாமலைபுரம், எம். ஆர்.சி நகர், சென்னை–600 028.

<u>நகல்</u>
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

செயலாளர்